**தலைப்பு 239 – வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தித்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

  எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ)பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது.

(ஆ) வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தினால் முன்னைய ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

**2. நிதி மீளாய்வு**

**2.1 செலவின முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்காய்வு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 4 மூலதனச் செலவின விடயங்களுக்காக மிகை நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்ட காரணத்தினால் ஆண்டில் பயன்படுத்தப்பட்டதன் பின்னர் அச்செலவின விடயங்களில் சேமிப்பு தேறிய ஏற்பாட்டிலிருந்து 52 சதவீதம் முதல் 92 சதவீதத்திற்கு இடையே வீச்சொன்று எடுத்திருந்தது. | நிதிப் பிரமாணம் 50 இன் மதிப்பீடு இயலுமானவரை சரியாக தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | திருத்த வேலைகள் நிதி அமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்றது. அந்நடவடிக்கைகள் அவர்களால் திட்டமிடப்பட்டதன் பிரகாரம் நிறைவேற்றாமை மற்றும் நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகள் தாமதமானமையால் ஆரம்ப மதிப்பீட்டிற்கு ஒப்பாக திருத்த செலவின மதிப்பீட்டில் விலகல் இடம் பெற்றிருந்தது. |
| (ஆ) | ஆரம்ப செலவின மதிப்பீட்டிற்கு ஒப்பாக திருத்திய செலவின மதிப்பீட்டில் 11 செலவின விடயங்களில் விலகல் மறை 150 சதவீதத்திலிருந்து 94 சதவீதத்திற்கு இடைப்பட்டதாக இருந்தது. | - மேற்படி - | 08 செலவின விடயங்களில் எதிர்பார்க்கப்பட்ட செலவினத்தை கூடுதலாக செலவினமொன்றை மேற்கொள்வதற்கும் நேர்ந்ததால் ஆரம்ப செலவின மதிப்பீட்டிற்கு ஒப்பாக திருத்திய செலவின மதிப்பீட்டில் விலகல் ஒன்று இடம்பெற்றிருந்தது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டத்தை பெற்றுக்கொள்ளப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2018 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டில் புதிய கடன் உடன்படிக்கை மூலம் ஐ.அ.டொ. மில்லியன் 2,004 ஆன நிதியத்தை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதும் 2018 ஆம் ஆண்டில் 40 கடன் உடன்படிக்கைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டிருந்த நிதியளிப்பு இணக்கப்பாடுகளின் பெறுமதி ஐ.அ.டொ. மில்லியன் 1,242 ஆக இருந்தது. அதற்கு இடையே உலக வங்கி, சீனா, யப்பான், மற்றும் கொரியா ஆகிய நாடுகளிலிருந்து பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்பட்ட நிதிய அளவு முறையே ஐ.அ.டொ. மில்லியன் 200, 400, 500 மற்றும் 40 ஆக இருந்ததுடன் 2018 ஆம் ஆண்டில் முறையே ஐ.அ.டொ. மில்லியன் 104,165, 98 மற்றும் 22 ஆன நிதியத்தை பெற்றுக்கொள்ள முடியுமாக இருந்தது. | முடியுமான வரை எதிர்பார்க்கப்பட்ட தன் பிரகாரம் இலக்கினை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் பொருத்தமானதாகும். | உங்களது அறிகையில் குறிப்பிடப்படும் விடயங்கள் உண்மையானதுடன் மிகவும் நமைுறையான மற்றம் எமது கட்டுபாட்டிற்கு அப்பலான அரசியல் மாற்றம், சட்டரீதியான சிக்கல்கள் மற்றம் கொள்கை தீர்மானம் மாற்றங்கள் போன்ற வடயங்கள் காரணமாக 2018 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்ட வகையில் கடன் உடன்படிக்கைகள் கைச்சாத்திட முடியாமல் போனது |
| (ஆ) கீழே காட்டப்பட்ட கடன் உடன்படிக்கைகளுக்காக கருத்திற் கொள்ள வேண்டிய காலம் எடுத்திருந்த போதும் அது தொடர்பான செயற்திட்டம் இதுவரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |

| கடன் இலக்கம் | செயற்திட்டத்தின் பெயர் மற்றும் கடன் உடன்படிக்கை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| 2014023 | பௌமீக தொலைக்காட்சி ஒலிபரப்பு டிஜிடல்மயப்படுத்தல் செயற்திட்டம் 2014.09.23 | உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டம் தாமதமாக்காமல் விரைவில் செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2014 செப்தம்பர் 24 ஆந் திகதி செயற்திட்டத்திற்கான கடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. இதுவரை நிறுவனம் கடன் உடன்படிக்கையை திருத்தம் செய்யும் செயற்பாட்டினை ஆரம்பித்திருக்கவில்லை. |
| 2014039 | ருவன்வெல்ல நீர் வழங்கல் செயற்திட்டம் | - மேற்படி - | குறித்த கடன் உடன்படிக்கை 2014 |

| | | | |
|---|---|---|---|
| | 2014.12.30 | | திசெம்பர் மாதம் கைச்சாத்திடப்பட்டிருந்தது, கேள்வி செயற்திட்டத்தின் பொறியியல் திணைக்களத்தினை விட மிகவும் கூடிய பெறுமதியொன்றை எடுத்த காரணத்தினால் இரு தரப்பினருக்கு இடையே இறுதி இணக்கப்பாடொன்றிற்கு வரவில்லை. |
| 201352 | பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு | - மேற்படி - | இது வட்டியற்ற கடனாக இருந்ததுடன் சிக்க லொன்று இல்லாத செயற்திட்டமொன்றாக செயற்படுத்துவதற்கு சீன தூதரகத்தின் இணக்கப்பாடு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. |
| 2014021 | திறன் அபிவிருத்தி செயற்திட்டம் (பி பகுதி) 2014.09.12 | - மேற்படி - | கலந்துரையாடல் பல தடவை மேற்கொள்ளப்பட் போதும் திறன் தொழில் அபிவிருத்தி அமைச்சு செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிநாட்டு வள தரப்பினர் திருப்தியடையும் வகையில் குறித்த பணத்தை முயைாக பயன்படுத்த முடியாதிருந்தது. |

### 3.3 எதிர்பார்க்கப்பட்ட நலன்களை பெற்றுக்கொள்ளாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக தேவையான நிதி 03 கடன் வசதிகளின் கீழ் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் 2012033 ஆம் இலக்க கடனின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட ஐ.அ.டொ. மில்லியன் 600 தொகை செயற்திட்டத்திற்காக முழுமையாக பயன்படுத்தப்பட்டுள்ளது. 2012033 ஆம் இலக்க கடனின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட இரண்டாவது கடன் வசதிகளான | பயன்படுத்தாத பணத்தின் பேரிலும் கெடுப்பனவு இடம்பெறுவஅது தொடர்பாக கூடுதலாக கவனம் செலுத்த வேண்டும். | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் பயன்படுத்தி பணத்திற்கு செலுத்த வேண்டிய கடன் வட்டிக்கு மேலதிகமாக பயன்படுத்தாத பணத்தின் மீது வருடாந்தம் 0.5' ஆன கடப்பாட்டிலான கொடுப்பனவு செய்ய வேண்டியுள்ளதால் 2018 ஆம் ஆண்டிற்காக யுவான் மில்லியன் 3.25 ஆன கடப்பாட்டிலான கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே 2019.05.331 ஆந் |

யுவான் மில்லின் 1,000 தொகையில் 2018 தசெம்பர் 31 ஆந் திகதி வரை யுவான் மில்லியன் 381.5 பயன்படுத்தப்பட்டிருந்தது. வெளிநாட்டு வளங்கள திணைக்களத்திடமிருந்து கிடைத்த தகவல்களின் பிரகாரம் மொத்த கடன் தொகையையும் பயன்படுத்தும் நோக்கில் துறைமுக அதிகாரசபை இல்லாமை அடிப்படையில் இரண்டாவது கடன் தொகையான ஐ.அ.டொ. மில்லியன் 51 அமுலாக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் ஏனைய இலக்கம் 2012032 ஆம் இலக்கத்தின் கீழ் பெற்றுக்கொண்ட கடன் தொகைக்காக 2018 ஆம் ஆண்டில் கடன் வட்டி கொடுப்பனவு தவிர பயன்படுத்தப்படாத கடன் தொகைக்காக யுவான் மில்லியன் 3.25 கடப்பாடு கொடுப்பனவு செய்ய வேண்டியிருந்தது,

திகதியின் பின்னர் கடன் தொகையில் பயன்படுத்தாத தொகை இரத்தாகும்.

(ஆ) விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியமான (IFAD) மூலம் 712-LK ஆம் இலக்க கடனின் கீழ் சிறு தோட்ட முயற்சியாளர்களை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக வழங்கப்பட்ட முற்பணத் தொகையில் பயன்படுத்தப்படாத அ.ஐ.டொ. 34,472/71 (XDR 21,818/17) தொகை 2018 செப்தம்பர் 04 ஆந் திகதி மீண்டும் கடன் வழங்கிய நிறுவனத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. எனினும் இக்கடன் தொகைக்காக சேவைக் கட்டணமொன்று கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

- மேற்படி -

சிறு தோட்ட முயற்சியாளர்களை அபிவிருத்தி செய்யும் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் 0.75% சதவீதம் மாத்திரமே சேவைக் கட்டணமாக கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. இந்த உடன்படிக்கையின் கீழ் கிடைத்த முற்பணத்தொகையில் எஞ்சிய தொகையை மீண்டும் கடன் வழங்கும் நிறுவனத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. மீளச்செலுத்தும் தொகை அடிப்படையில் கொடுப்பனவு செய்யப்படும் சேவைக்கட்டணம் தீர்மானிக்க முடியாதெனவும் உடன்படிக்கையின் பிரகாரம் அது பயன்படுத்தல் ஆகையல் அதற்குரிய கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| (இ) | வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் ஈடுபாட்டுடன் இலஙகைக்கு 2017 ஆம் ஆண்டின் போது கிடைத்த வெளிநாட்டு புலமைப் பரிசில்கள் மற்றும் பயிற்சி சந்தர்ப்பங்கள் 439 ஆகும் (சீன புலமைப்பரிசில் தவிர) 132 சந்தர்ப்பங் களுக்காகவும் 2018 ஆம் ஆண்டில் செப்தம்பர் வரை கிடைத்த 346 சந்தர்ப்பங்களில் 82 இற்காக சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் அனைத்தும் நிராகரிக்கப்பட்டமையால் பயிற்சி சந்தர்ப்பங்கள் நாட்டிற்கு கிடைக்காமல் போனது. பெயர் முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்படாமை மற்றும் விண்ணப்பங்கள் கிடைக்காமை அடிப்படையில் 2017 ஆம் ஆண்டின் போது 51 வெளிநாட்டு புலமைப் பரிசில்கள் மற்றும் பயிற்சி சந்தர்ப்பங்களும் 2018 செப்தெம்பர் மாதம் வரை (சீன புலமைப்பரிசில் தவிர) 20 சந்தர்ப்பங்களும் கிடைக்காமல் போயிருந்தன. எவ்வாறாயினும் குறுங்கால மற்றும் நீண்டகால வெளிநாட்டு புலமைப் பரிசில்கள் மற்றும் பயிற்சி சந்தர்ப்பங்கள் என்பன 2017 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2018 ஆம் ஆண்டின் போது 13 சதவீத அதிகரிப்பொன்றை பெற்றுக் கொண்டிருந்தது. (விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறாத பாடநெறிகள் அனைத்தும் இருதரப்பு அல்லாதது என வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் குறிப்பிடப் பட்டிருந்தமை சர்ச்சைக்குரிய விடயமொன்றாகும்.) | அநதந்த அமைச்சு மற்றும் திணைக்களங்களில் உத்தியோகத்தர்க ளுக்கு பயிற்சியளித்தல் இனங்கண்டு இவ்வாறு கிடைக்கும் புலமைப் பரிசில்கள் மற்றும் பயிற்சி சந்தர்ப்பங்கள் என்பவற்றிற்காக அந்த உத்தியோகத்தர்க ளிடமிருந்து விரைவாக விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளும் நடைமுறையொன்று அறிமுகப்படுத்தல் மற்றும் விண்ணப்பிக்கும் போது தகைமைகளை பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்க ளின் விண்ணப்பங்களை உரிய திகதிகளுக்கு முன்னர் சமர்ப்பித்தலின் முக்கியத்துவத்தை தெளிவுபடுத்தது வதன் மூலம் இவ்வாறான நிலைமையை குறைத்துக்கொள்ள முடியுமென கணக்காய்வின் பரிந்துரையாகும். | அபிவிருத்தி தரப்பினரிடமிருந்து நியதிகள் பூர்ததி செய்யப்படாத சந்தர்ப்பங்களில் எம்மால் அனுப்பிவைக்கப்படும் விண்ணப்பங்கள் அவர்களால் நிராகரிக்க முடியும். மேலும் விண்ணப்பங்கள் கிடைக்காத பாடநெறிகள் அனைத்தும் இருதரப்பு பாடநெறிகள் அல்ல. ஆகையால் விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதால் எமது உத்தியோகத்தர்களுக்கு அப்புலமை பரிசில்கள் கட்டாயமாக கிடைக்குமென கருத முடியாது. குறித்த தகைமைகளை பூர்த்தி செய்த உத்தியோகத்தர்களை தெரிவுசெய்வதற்குரிய சுற்றறிக்கையின் பிரகாரம் மேற்கொள்ள வேண்டியதுடன் குறித்தஜரக்கப்பட்ட திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை எமக்கு அனுப்புவது அமைச்சின் பொறுப்பாகும். மேலும் 2016 ஆம் ஆண்டின் போது 1230 வெளிநாட்டு புலமைப்பரிசில்களும் 2016 இற்கு ஒப்பாக 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் அது முறையே 24 மற்றும் 41 சதவீதமான அதிகரிப்பொன்று பெற்றுக்கொண்டதும் திணைக்களத்தின் உயர்ந்த செயலாற்றலை காண்பிக்கின்றது. ஆதலால் வரைவு அறிக்கையில் 3.1.2 இற்காக இணங்க முடியாதென தயவுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். |
| (இ) | 1994 ஏப்ரல் 20 அந் திகதிய 30/94 ஆம் இலக்க வெளிநாட்டு மானியக் கணக்கு வைப்பதற்குரிய அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் வெளிநாட்டு மானியம் தொடர்பாக சகல கொடுக்கல் வாங்கல்களும் பொது திறைசேரியின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டும் | சுற்றறிக்கையில் காணப்படும் அறிவுறுத்தல்களின் பிரகாரம் வெளிநாட்டு மானியங்கள் தொடர்பாக தேவையான முறைமை மற்றும் கட்டுப்பாட்டு முறைமைகள் | கிடைக்காத வெளிநாட்டு மானியங்களுக்காக அமைச்சினால் கையொப்பமிடப்படுமாயின் அந்த உடன்படிக்கையின் பிரதியொன்றும் உரிய நலனாலிகள் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திற்கும் அனுப்புதல் உரிய பிரதான கணக்கீட்டு |

| | | |
|---|---|---|
| .அதன் பிரகாரம் அவ்வாறு நடவடிக்கை எடுக்க வேண்டுமென சகல அரச நிறுவனங்கள் மற்றும் மானிய நாடுகள் / நிறுவனங்களுக்கு பல தடைவ தெரியப்படுத்தியிருந்தன. எனினும் திணைக்களத்திடம் உள்ள தரவுகள் திணைக்களங்கள் ஊடாக கிடைக்கும் வெளிநாட்டு மானியங்கள் தொடர்பான தரகவல்கள் மாத்திரமாக அவதானிக்கப்பட்டது. ஏனைய அரச நிறுவனங்களுக்கு இவ்வாறான மானியங்கள் கிடைத்துள்ளதா என்பதை உறுதிப்படுத்தும் முறையொன்று வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திடம் இல்லையென்பது அவதானிக்கப்பட்டது. தெரிவு பரிசோதனையின் போது பெற்றுக்கொண்ட தகவல்களின் பிரகாரம் 03 நிறுவனங்களினால் மீளாய்வாண்டில் ரூபா 114,879,740 ஆன வெளிநாட்டு மானியம் நேரடியாக குறித்த நிறுவனத்திற்கு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | அறிமுகப்படுத்தப்பட வேண்டும். | உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டும். அதன் பிரகாரம் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தினால் மானிய நிறுவனம் / நபர்களால் பெற்றுக் கொண்டு தரவு முறைமையில் பதிவுசெய்தல் இடம் பெறுகின்றது. அத்தரவு களின் பிரகாரம் எதிர்வரும் ஆண்டிற்காக மானிய எதிர்வுகூறல் மேற்கொள்ளப் படுகின்றது. அவ்வாறு பதிவு செய்யப்பட்ட வெளிநாட்டு மானிய செயற்திட்டங்கள் உள்ளதாக அவதானிக்கப்படும் போது அந்நிறுவனங்கள் அழைக்கப்பட்டு சரியான நடைமுறை தொடர்பான ஆலோசணை வழங்கப்பட்டுள்ளது. |

## 3.3 சொத்தக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) சொத்துக்கள் கொள்வனவு, சொத்தக்களை பெற்றுக்கொள்ளல் மற்றும் பயன்படுத்துவதற்கான திட்டவட்டமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக அவதானிக்கப்படவில்லை. | பொருளிப்பில் உள்ளடக்கப்பட்ட பொருட்களை இலகுவாக அறிந்து கொள்வதற்கு முடியுமான வகையில் ஒவ்வொரு பிரிவினாலும் வெவ்வேறாக பயன்படுத்துதல் மற்றும் தமது பிரிவிற்கு உரியதல்லாத செயற்பாடுகளை உரிய பிரிவுகளுக்கு கையளித்ததன் மூலம் ஒவ்வொரு பிரிவினதும் கணிப்பீட்டு நடவடிக்கைகளை | கணக்காய்வினால் சுட்டிக்காண்பிக்கப்பட்ட விடயங்கள் குறித்துக்கொள்ளப்பட்டதுடன் எதிர் காலத்தில் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக குறித்துக் கொண்டுள்ளதாக அறிய தருகின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| | | இலகுவாக்குவதற்காக பாதுகாப்பொன்றும் காணப்படுவதாக கணக்காய்வின் பரிந்துரையாகும். | |
| (ஆ) | பொருளிப்பு பதிவேட்டில் உள்ளடக்கப்பட வேண்டிய ஒவ்வொரு பொருளையும் பொருட் பதிவேட்டில் உள்ளடக்கப்பட வேண்டியதுடன் பொருட் கணிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் வயர் நீடிப்பு (wire code) மற்றும் வேன் வண்டி தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ‘‘நிகழ்ச்சி நிரல்’’ தொடர்பாக திணைக்களத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு தேவையான இலக்கு, அடிப்படை தரவுகள், இலக்கினை அடைந்து கொள்வதற்காக அடைவுகள் உட்பட செயன் முன்னேற்றத்தை அளவிடுவதற்காக குறிகாட்டிகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.<br>திணைக்களத்தினால் கடன் உதவி வழங்கும் ஆநெகமான செயற்திட்டங்கள் சுகாதாரம், எரிசக்தி, நீர் வழங்கல், அனர்த்த முகாமைத்தவும், விவசாயம், உட்கட்டமைப்பு வசதிகள் போன்ற துறைகளுக்குரியதாக இருப்பதால் ஒட்டுமொத்த அரசின் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துொள்வதில் கவனம் செலுத்தி திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டுமென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட. | நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் திணைக்களத்தின் செயலாற்றல் தொர்பில் கவனம் செலுத்துதல் பொருத்தமானதாகும். | ‘‘நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான உலகலாவிய ஒத்துழைப்பு செயற்படுத்துதல் சந்தர்ப்பங்களை தரிதப்படுத்ததல் மற்றும் மீளவலுவூட்டுதல் போன்ற நோக்கங்களை நிறைவேற்றவதற்காக பங்களிப்பினை வழங்குதல் எமது திணைக்களத்துடன் நேரடியாக தொடர்பபடும் நிலைபேறான அபிவிருத்தியின் நோக்கமாகும். செயற் திட்டத்திற்காக கடன் மானியங்கள் பெற்றுக் கொள்ளும் செயற்பாடு அநேகமான வெளிநாட்டு அபிவிருத்தி தரப்பினர்களினால் குறித்த செயற்திட்டங்கள் ஊடாக நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளதா என கடன் வழங்கும் நியதிகளாக கருத்திற் கொள்ளப்படுகின்றது. |

## 5. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 156 மற்றும் உள்ளவாறான பதவியணியினர் 125 ஆக இருந்தது. சிரேஷ்ட நிலையில் 10 பதவிகளும், மூன்றாம் மட்டத்தில் 02 வெற்றிடங்களும் இரண்டாம் மட்டத்தில் 07 பதவிகளும், ஆரம்ப நிலையில் 12 பதவிகளுமாக 31 பதவிகள் வெற்றிடங்களாக காணப்பட்டன. | குறித்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | புதிய அரச முகாமைத்துவ உதவியாளர்களை இணைக்கும் போது திணைக்களத்தின் இரண்டாம் நிலை வெற்றிடங்களை குறைத்துக் கொள்ள முடியுமாக இருந்தது. அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் நிறைவேற்ற உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்யும் தேவைப்பாடு காணப்பட்ட போதும் நவீனமயபடுத்தலின் போது அலுவலக இடவசதி களின் தேவைப்பாடு 1/3 அளவில் மேலும் குறைவடைந்துள்ளது. |
| (ஆ) பதவியிணியினரின் செயலாற்றலை அதிகரிப்பதற்காக நிறுவனத்தின் ஒட்டுமொத்த பதவியணயினருக்கும் வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கை கைச்சாதிடப் பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டம் | இவ்வாண்டு முதல் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்காக உத்தியோகத்தர்கள் தெரியப்படுத்தப்பட்டு எதிர்வரும் நடவடிக்கைகள் எடுப்பதற்கு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளது. |
| (இ) பதவியணியினரிடம் காணப்படும் திறன்கள் மற்றும் காணப்பட வேண்டிய திறன்களுக்கு இடையே விலகலை இனங்காண்பதற்காக பொருத்தமான நடைமுறையொன்று தயாரிக்கப்படாமை மற்றும் நிறுவனத்திற்கென பிரத்தியேகமான மனித வளங்கள் அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்பட்டி ருக்கவில்லை | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) மனித வளங்கள் அபிவிருத்தி திட்டத்தினுள் பதவியணியின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஆகக் குறைந்தது 12 மணித்தியாலயத்திற்குரிய பயிற்சி சந்தர்ப்பமொன்று உறுதிப் படுத்தப்பட வேண்டிய போதிலும் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தின் | - மேற்படி - | நியமத்துடனான சந்தர்ப்பங்கள் குறைவாக இருப்பதால் காணபபடும் நிதிஏற்பாட்டு நிலைமையினால் பயிற்சி சந்தர்ப்பம் மட்டுப்படுத்த நேர்ந்தது. |

பதவியணியின் 125 உறுப்பினர்களில் 81 உறுப்பினர்களுக்காக மாத்திரம் அதாவது 65 சதவீதத்திற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தன.